PR NO: 667 Date: 15.8.2008

## துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது 2008

துணிவு மற்றும் சாகசச் செயல் புரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஒவ்வோர் ஆண்டும் கல்பனா சாவ்லா விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு ரூ.5,000/- மதிப்புள்ள தங்கமுலாம் பூசிய பதக்கமும், ரூ.5,00,000/- க்கான காசோலையும் வழங்கப்படுகிறது. இதற்காக அமைக்கப்பட்ட தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு இந்த விருதினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தினவிழாவின்போது வழங்குவார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பி.ஜோதி நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் இந்த ஆண்டுக்கான துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

திருமதி பி.ஜோதி நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் பத்மநாபபுரம் வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்த காலத்தில் ஆற்றுப் பகுதிகளுக்கு சென்று துணிச்சலுடன் மணல் கொள்ளையர்களின் கொட்டத்தை அடக்கி முழுமையாக மணல் திருட்டை அடியோடு ஒழித்ததோடு மட்டுமல்லாமல், பல்வேறு அச்சுறுத்தலுக்கு இடையேயும் துணிவோடு செயல்பட்டு மதக்கலவரம், திருட்டு ஆகியவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன் கள்ளச் சாராயம், போதைப்பொருள் மற்றும் சமூக விரோத செயல்களையும் தடுத்து, நீதியை நிலைநாட்ட தீரமுடன் போராடிய அவரது மன உறுதியினைப் பாராட்டி, இந்த வருடத்திற்கான (2008) கல்பனா சாவ்லா விருது அன்னாருக்கு வழங்கப்படுகின்றது.

Issued By: DIPR, Chennai-9